MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-113)

23-08-2020 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சார்வரி வருடம் (ஆனி 7) | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 57 | இதழ் 33 பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360

ஆசிரியர் : பேரருள் திரு. ஆ.அருளானந்தம்
துணை ஆசிரியர் : அருள் திரு. இர.ஜெயந்த் ராயன்

## மறைக்கல்வியுரை: கொள்ளைநோய்க் காலத்தில் மனித மாண்பு



கடவுள் வழங்கிய மாண்பும் அதிலிருந்து பிறப்பெடுக்கும் உரிமைகளும், சமூக வாழ்வின் அடிப்படையாக இருந்து, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உட்பொருட்களில் பாதிப்பைக் கொண்டுள்ளன.

கோவிட்-19 கொள்ளைநோயால் இத்தாலி நாடு பாதிப்படையத் துவங்கிய காலத்திலிருந்து, தன் நூலக அறையிலிருந்தே, புதன் மறைக்கல்வி உரைகளை வழங்கிவந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஜீலை மாத கோடை விடுமுறைக்குப்பின், ஆகஸ்ட் 5ம் தேதி, தன் நூலக அறையிலிருந்தே மறைக்கல்வி உரையைத் துவக்கினார். '**உலகை குணமாக்கும்**' என்ற தலைப்பில், புதிய ஒரு தொடரை அந்நாள் மறைக்கல்வியுரையில் ஆரம்பித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இப்புதன், ஆகஸ்ட் 12ம் தேதியன்று, '**கொள்ளைநோய் காலத்தில் மனித மாண்பு**' குறித்து தன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

கடவுள் மனிதனைப் படைத்தது குறித்த ஒரு பகுதி தொடக்க நூலிலிருந்து முதலில் வாசிக்கப்பட்டது
கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்,
கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்,
ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.

கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள், அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்" என்றார் . . . .

ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார். (தொடக்க நூல் 1: 27-28, 2, 15)

### மறைக்கல்வியுரை

அன்பு சகோதரர்களே, சகோதரிகளே, திருஅவையின் சமூகப் படிப்பினைகளின் ஒளியில், தற்கால கொள்ளைநோயின் பாதிப்புக்கள் குறித்து மறைக்கல்வி உரைகளின் தொடர்ச்சியாக இன்று நாம், 'மனித மாண்பு' என்ற அடிப்படைக் கருத்தைச் சிந்திப்போம். ஒரு பொய்யான, தன்னல சார்புடைய எண்ணப்போக்கு, மனித மாண்பையும், மனித உறவுகளையும் மறுத்து மனிதர்களை நுகர்வுப் பொருட்களாக நடத்தி, பயன்படுத்தித் தூக்கியெறியும் கலாச்சாரம் ஆகியவை (நற்செய்தியின் மகிழ்வு – Evangelii Gaudium, 53), நம் சமூகங்களில் பரவி வருவது குறித்து, இந்த கொள்ளைநோய் நமக்கு விழிப்புணர்வைத் தந்துள்ளது. இதற்கு நேர்மாறாக, நாம் இறைவனின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டுள்ளோம் என்பதை நம் விசுவாசம் நமக்கு எடுத்துரைக்கிறது. இறைவனுடன் ஒன்றித்து வாழ்வதற்கும், ஒருவர் ஒருவரையும், படைப்பனைத்தையும் அன்பு கூரவும் நாம் படைக்கப்பட்டிருக்கிறோம்.

உண்மை சீடத்துவம் பற்றி எடுத்துரைக்கும் இயேசு, சீடத்துவம் என்பது, இயேசுவின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி, பிறர்நலச் சேவையில் நமது வாழ்வை செலவிடுவதாகும் என்பதைக் காட்டுகிறார். கடவுள் வழங்கிய மாண்பும், அதிலிருந்து பிறப்பெடுக்கும் உரிமைகளும், சமூக வாழ்வின் அடிப்படையாக இருந்து, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உட்பொருட்களில் பாதிப்பைக் கொண்டுள்ளன. இந்த கொள்ளைநோயை எதிர்கொண்டு பதிலுரைக்கும் கிறிஸ்தவர்களாகிய நாம், நற்செய்திக்கு எதிராகச் செல்லும் மனித மாண்பு மீறல்களை எதிர்த்துப் போராடுவதோடு, மனித குலமனைத்தின் நலனுக்காகவும், பொது இல்லமாகிய நம் இவ்வுலகின் நல்வாழ்வுக்காகவும் உழைக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

---

**புதுவை மிஷன் அச்சகம் தோள் கொடுப்பீர்! தாங்கிடுவீர்!!**

**மிஷன் அச்சக புனரமைப்புக்காக நன்கொடை வழங்கியவர்கள்**

| | | |
|---|---|---|
| 1) | Bro.A.M.James, Dharapuram. | 2000.00 |
| 2) | பெயர் வெளியிட விரும்பாதவர், புதுவை. | 1000.00 |

தாராள உள்ளத்தோடு நன்கொடை கொடுத்து உதவிய நல் உள்ளங்களுக்கு நன்றி. மற்றவர்களும் உதவிட அன்பு கலந்த இறையாசீரோடு கேட்டுக் கொள்கிறோம். - **மேலாளர்.**

ஆசிரியர் பேனா...

# அன்பாக இருப்போம்! உப்பாகச் செயல்படுவோம்!

கல் உப்பின் விலை ஏற்றம் பெற்றுள்ளது. அதற்குக் காரணம் அதன் தேவை இப்போது அதிகரித்துள்ளது. தற்போது கல் உப்பு கிருமிநாசினியாகப் பயன்படுத்தப்படுகிறது. தூள் உப்பு (table salt) நச்சுத்தன்மை கொண்டது என்றும், கல் உப்பு ஆபத்து இல்லாதது என்றும் வலைத்தளத்தின் தகவல்.

**உப்பின் பயன்பாடு:** 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். உப்பில்லாப் பண்டம் சுவையற்றது என்பதால் மட்டும் அல்ல; உப்பு கலக்காத உணவுப் பொருட்கள் விரைவில் கெட்டுப்போகும் என்பதாலும்தான் இந்தப் பழமொழி வழக்கில் இருக்கிறது. அடுப்புக்கரியோடு உப்புச் சேர்த்து பல் துலக்கும் பழக்கம் பலருக்கு இருந்தது. உப்பு வாயில் இருக்கும் கிருமிகளை அழித்து, வாய் துர்நாற்றத்தைப் போக்கும். மேலும் உப்பில் இருக்கும் சோடியம் குளோரைடு (nacl) என்னும் வேதிப்பொருள் உடல் வலிமைக்கு தேவையானது. அதனால்தான் உப்பு இல்லாமல் சாப்பிட்டால் 'உடம்பு வெலவெலத்து (வலு இழந்து) விடும்' என்று சொல்வார்கள். தவறு செய்துவிட்டோம் என்ற குற்ற உணர்வே இல்லாமல் சிலர் இருப்பார்கள். அவர்கள் குற்றத்தை உணரத் தூண்டும்படி 'நீ உப்பு போட்டுதானே சாப்பிடுகிறாய்' என்று கேட்போம்.

**சேலரி:** மாட்டிற்கு தவிடு வைக்கும்போது அதிலே உப்பு கலப்பது நம் வழக்கம். ரோமானியரும் குதிரைக்குத் தீனி வைக்கும்போது உப்புச் சேர்ப்பார்கள். உப்பு வாங்குவதற்காக, மாதா மாதம், லாயக்காரனுக்கு கொடுக்கப்பட்ட தொகைக்கு 'சலாரியும்' (Salarium) என்று சொல்வர். இதில் வந்த சேலரி (Salary) என்ற ஆங்கில வார்த்தை மாதச் சம்பளத்தைக் குறிக்கின்றது.

உப்பிட்டு உண்டு வலிமையோடு இருக்க வேலை கொடுத்து ஊதியம் கொடுப்பவருக்கு நன்றியோடு இருக்க வேண்டும் என்பது நம்மவரின் உணர்வு. அப்படி நினைவூட்டும் 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்ற பழமொழியையும் நாம் அனைவரும் அறிவோம்.

**அழைப்பு:** நம் வாழ்வுக்கும், வலிமைக்கும் உப்பு இன்றியமையாததாக இருக்கின்றது. சமூக வாழ்வை வளப்படுத்தவும், பாதுகாக்கவும் நாம் உப்பாகச் செயல்பட இயேசு அழைப்பு விடுக்கின்றார். "நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும்; வேறு ஒன்றுக்கும் உதவாது" (மத் 5:13).

**'அன்பு' 'உப்பு':** மற்றவரின் துன்பத்தைக் கண்டு உதவிடும் அக்கறை கொள்ளாத (Indifferent) சமுதாயமாக, 'தன்நலம் மிகு' (Selfish) சமுதாயமாக இன்றைய சமுதாயம் வளர்ந்து கொண்டு வருகிறது. இப்படி 'அழுகிக் கொண்டிருக்கும்' இச்சமுதாயத்தை 'வாழ்விக்கும் சமுதாயமாக' மாற்ற நாம் உப்பாகச் செயல்பட அழைக்கப்படுகின்றோம். நல்லதாக இருப்பதைக் கெடாமல் காக்கும் ஆற்றல் உப்புக்கு இருக்கிறது. அப்படியே தனி மனிதனும், சமுதாயமும் கெட்டுவிடாமல் காக்கின்ற உப்பு **'அன்பு'** மட்டுமே.

அன்பினால் சாரம் ஏற்றப்பட்ட வாழ்வு சமுதாயத்தை தீமைகளில் இருந்து பாதுகாக்கும்.

ஒருவர் கடவுளிடம் இருந்தும், மனிதரிடம் இருந்தும் பிரிந்து அழிந்துவிடாமல் காப்பதும், அனைவரோடும் இணைந்து மகிழ்ந்து வாழ ஆற்றல் அளிப்பதுமான இயேசுவின் அன்பால் சாரம் ஊட்டப்பட்ட அன்பின் வெளிப்பாடுகளைப் புனித பவுல் அடிகளார் பட்டியலிடுகின்றார். "அன்பு பொறுமையுள்ளது; நன்மை செய்யும், பொறாமைப்படாது; தற்புகழ்ச்சி கொள்ளாது. அன்பு இழிவானதைச் செய்யாது; தன்னலம் நாடாது; எரிச்சலுக்கு இடம் கொடாது; தீங்கு நினையாது. அன்பு தீமையில் மகிழ்வுறாது; மாறாக உண்மையில் அது மகிழும். அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும்; அனைத்தையும் நம்பும்; அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும்; அனைத்திலும் மன உறுதியாய் இருக்கும்." (1கொரி 13:4-7).

**இன்றைய நிலை:** நம் நாட்டிலும் உலகிலும் தீமையின் ஆதிக்கம் வளர்ச்சி பெற்று, சமுதாயத்தின் நற்பண்புகள் அழிந்து கொண்டிருப்பதை நாம் அனுபவிக்கின்றோம். மதம், மொழி, இனத்தின் பெயரால் சமீபத்தில் பெங்களூரில் உருவாக்கப்பட்ட கலவரம், பொருளாதாரத்தை மையப்படுத்தி ஆயுதப் போர்களும், ஆக்கிரமிப்புக்களும், கருத்தியல் போர்களும் பெருகிவிட்டன. (உ.ம். சீனாவின் கான்வா பள்ளத்தாக்கு ஆக்கரிமிப்பு, லெபனான் குண்டு வெடிப்பு) மக்களிடம் இருக்கும் சாத்வீக குணங்களை (அன்பு, அமைதி, நேர்மை போன்றவை) அழிக்கும் நோக்கில் தன்னலம், பேராசையைத் தூண்டும் ஊடக விளம்பரங்கள், விளையாட்டுக்கள் பரப்பப்படுகின்றன. மித மிஞ்சிய அறிவாற்றல், பொருளாசை நன்மை அனைத்தின் ஊற்றான கடவுளை ஏற்க மறுக்கிறது. எதிர்மறை கருத்தியல்கள் சகோதரத்துவத்தையும், சமூக ஒற்றுமையையும் சீர்குலைக்கின்றன.

**பொதுநிலையினரின் அழைத்தல்:** இத்தகையச் சூழல்களை மாற்றி அமைத்து, இயேசு கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க, திருஅவையின் பொதுநிலையினர், உப்பாகச் செயல்பட அழைக்கப்படுகின்றனர். "நம் காலத்தில் புதுப்புதுக் கேள்விகள் கேட்கப்படுகின்றன. சமயம், ஒழுக்க நெறி, மனித சமுதாயம் என்பவற்றை அடியோடு அழிக்கத்தேடும் மிகப்பெரும் தப்பறைகள் பல பரவலாக எழுந்துள்ளன. எனவே கிறிஸ்துவக் கொள்கைகளை விளக்குவதிலும், காப்பாற்றுவதிலும் தக்கமுறையிலே தற்காலச் சிக்கல்களில் இவற்றைப் பயன்படுத்துவதிலும், தத்தம் திறமைகளுக்கும், கல்விக்கும் ஒத்தவண்ணம், திருச்சபை உள்ளபடி, தம் பணியைக் கருத்துடன் ஆற்றுமாறு பொதுநிலையினரை திருச்சங்கம் உளமாரத் தூண்டுகிறது" (2ஆம் வத்திக்கான் திருச்சங்கம், பொதுநிலையினரின் திருத்தூதுப் பணி எண் 6:4).

**நிறைவாக:**

அன்பு என்ற உப்பு நம் வாழ்வுக்கு சுவையூட்டட்டும்!

அன்பு என்ற உப்பு சமுதாயத்தை அழிவிலிருந்து காக்கட்டும்!

அன்புச் சாரம் ஏற்றப்பட்ட நம் திருஅவை (திருச்சபை) நிலைவாழ்வுக்கு வழியாகட்டும்!

அன்பாக இருப்போம்! உப்பாகச் செயல்படுவோம்!




ஆண்டின் பொதுக்காலம் 23-ம் ஞாயிறு 6-09-2020 எசே.33:7-9 உரோ.13:8-10 மத்.18:15-20

# "ஒப்புரவாகுவோம்"



அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப் பள்ளி, புதுவை.

நாம் எல்லாருமே குடும்பங்களில், சமூதாயத்தில், திருச்சபையில், நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாம் ஒருவரோடு ஒருவர் சேர்ந்து, சார்ந்துதான் வாழவேண்டும். மேலும் மனிதர்கள் எல்லாருமே நிறைவானவர்கள், முழுமையானவர்கள் என்று சொல்ல முடியாது. எல்லாரிடமும் நிறை குறைகள் உண்டு, மனித பலவீனங்களால் உறவுச் சிக்கல்கள் ஏற்படுவதுண்டு, இதன் மூலம் மனத்தாங்கல்களும், கருத்து வேறுபாடுகளும் ஏற்படுவதுண்டு. இவற்றையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு ஒருவரோடு ஒருவர் ஒப்புரவாகி, ஒருவரையொருவர் முழுமையாக ஏற்றுக்கொண்டு அன்பு செய்து வாழ இந்த ஞாயிறு இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுகின்றது.

**நற்செய்தி பின்னணி:** இன்றைய நற்செய்தியின் வார்த்தைகளை இயேசு சொல்லியிருப்பாரா என்பது கேள்விக்குறி என்று விவிலிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். அதற்குக் காரணம், நற்செய்தியில் வருகின்ற "எக்ளேசியா" (மத்18:17) அதாவது "திருச்சபை" என்ற வார்த்தை, "திருச்சபை" என்ற வார்த்தை இறைநம்பிக்கைக் கொண்டவர்களை குறிக்க, ஏறக்குறைய கி.பி. 60 முதல் கி.பி 80 ஆண்டுகளில்தான் பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மத்தேயு நற்செய்தியாளர் இன்றைய நற்செய்தியை எழுதும்போது, திருச்சபைக்குள் சேர்ந்துவரத் தொடங்கிய மக்களுக்குள் இருந்த சில பிரச்சனைகள், மனத்தாங்கல்கள் மற்றும் தவறான புரிதல்கள் இவற்றை சரிசெய்ய இயேசுவின் அறிவுரையாக மத்தேயு படம் பிடித்துக்காட்டியுள்ளார். மேலும் இன்றைய நற்செய்தியின் இறைவர்த்தைகள் மாற்கு, லூக்கா மற்றும் யோவான் போன்றமற்ற நற்செய்தி நூல்களில் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**ஒப்புரவின் படிகள்:** இயேசு புனித மத்தேயு நற்செய்தியாளர் வழியாக நமக்குத் தந்த ஒப்புரவின் படிகள் என்று இன்றைய நற்செய்தியை ஏற்று வாழ்கின்றபோது நமது வாழ்வு தானே வளமடையும் நாம் நமது உறவு வாழ்விலே சங்கமிக்கப் போகின்றோம். எனவே, இன்றைய நற்செய்தியில் அந்த ஒப்புரவின்படி முறைகளை சற்று அழகாகச் சிந்தித்துப் பார்ப்போம். முதலில் பிறரை தனியே அணுகி தன்னுடைய, குறைகளை சுட்டிக்காட்டி, மனம்விட்டு பேசும் உரையாடல் அணுகுமுறை. இது உளவியல் வலிமைமிக்க ஓர் அணுகுமுறை என்றால் அது மிகையாகாது. இந்த மனந்திறந்த தனி நபர் உரையாடல் மூலம் பல சிக்கல்கள் தீர்க்கப்பட்டுவிடும். அவ்வாறு முதல் அணுகுமுறை வெற்றி பெறாவிட்டால் பரிவும், ஞானமும், விவேகமும் நிறைந்த ஒரு குழுவினரோடு உரையாடலில் ஈடுபடலாம். இதுவும் ஒரு வெற்றி அணுகுமுறையே. குழுவாகச் சென்று உரையாடும்போது பல பிரச்சனைகள் தீர்வதற்கு இது ஏதுவாக இருக்கும். இரண்டாவது அணுகுமுறையும் வெற்றிபெறாவிட்டால் திருச்சபை (பணியாளர்களிடம்) அமைப்புகளிடம் செல்வது நல்லது. இதுவும் மிக நன்றே. ஏனென்றால் நீதிமன்றங்களையும் பஞ்சாயத்துகளையும் அணுகாமல் (நமது பணமும், மானமும் போவதுதான் மிச்சம்) திருச்சபையை அணுகுவது மேன்மையானதன்றோ? திருச்சபையில் குரலுக்குச் செவிமடுக்கும் மனத்தாழ்மை உடையவர்கள் நிச்சயம் ஏற்றுக் கொள்வார்கள். இவ்வாறு திருச்சபைக்கும் செவிசாய்க்காவிட்டால், புறக்கணிப்பே மிகச் சிறந்த வழி. அதன்பின் அந்த மனிதர் எங்கும் செல்லத் தேவையில்லை, ஒன்றுமில்லாதவர் போல் தன் வாழ்வைத் தொடரட்டும். எனவே பிரச்சனைகள் வரும்போது அதை நமக்குள்ளாக மூடி வைத்திருப்பது ஆபத்தானது. அதுநிரந்தரமான உறவு முறிவுக்கு காரணமாகிவிடும். மாறாக, நமக்கு கொடுக்கப் பட்டிருக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி, நமது உறவுகளைச் சரிசெய்து கொள்ளவேண்டும். இல்லையென்றால் அது நமக்கு அழிவைத்தான் கொண்டுவரும் என்பது இயேசுவின் ஆணித்தரமான படிப்பினை.

**அன்பு:** தொடர்ந்து இயேசுநம் எல்லோரையும் மனம் ஒத்திருந்து வாழ அழைக்கின்றார். ஏனென்றால் நாம் மனம் ஒத்திருந்து வாழ்ந்தால்தான் நம்முடைய செபம் கேட்கப்படும்; மேலும் கடவுளின் பிரசன்னம் நம்மத்தியில் தங்கும் என்று இன்றைய நற்செய்தியில் இயேசு கூறுகின்றார். இந்த மனம் ஒத்திருந்தலில் முக்கியமான பண்பாக இருப்பது அன்பு. இதைத்தான் இன்றைய இரண்டாம் வாசகத்தில் பவுல் அடிகளார் மிக அழகாக எடுத்துரைக்கின்றார்; "நீங்கள் யாருக்கும் எதிலும் கடன்படாதீர்கள்; அன்பு செலுத்துவதே நீங்கள் ஒருவருக்கொருவர் செலுத்த வேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும்" என்கிறார். அதாவது நான் மற்றவரிடமிருந்து பெறுகின்ற அன்பை கடனாக நினைத்து மற்றவரிடம் திருப்பிச் செலுத்திவிட வேண்டும். அன்பை நமக்கென வைத்துக் கொள்ளக்கூடாது. இப்படிப்பட்ட அன்புதான் அடுத்தவருக்கு எந்தத் தீங்கும் இழைக்காது என்பது புனிதபவுல் அடிகளாரின் விவாதம். இசைக்கு மயங்காதவர்கள் இந்த உலகில் யாருமே இல்லை. அதுபோல அன்புக்கு அடிமையாகதவர்கள் இந்த உலகில் யாருமே இல்லை. உண்மையான அன்பிற்கு மனிதர்களை மனிதர்களிடமிருந்து பிரிக்கும் எத்தகைய பிரிவினைச் சுவரையும் உடைக்கும் வல்லமை உண்டு என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

**ஒப்புரவாகுவோம்:** நாம் "Touch me Not" என்ற ஒரு விசித்திரமான நவீன கலாச்சாரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதை யாராலும் மறுக்க இயலாது. பிரச்சனைகள், மனத்தாங்கல்கள் மற்றும் தவறான புரிதல்கள் இருக்கும்போது, நான் இப்படித்தான் இருப்பேன், "Touch me Not" எனக்கு அறிவுரை சொல்ல நீ யார்? என்ற ஆவணப் போக்குதான் அதிக நபர்களிடம் காணப்படுகின்றது. மேலும் உறவுச் சிக்கல்கள் ஏற்படுகின்றபோது மேலே கூறப்பட்ட அந்த ஒப்புரவின் படிமுறைகளைப் பின்பற்றாமல் தவறான பாதைக்கு செல்பவர்கள்தான் அதிகம் எனலாம். ஆம்! இந்த வாழ்க்கை குறுகியதுதான். நாம் வாழ்வதும் ஒரு முறைதான். நம்மில் பலர் பழிவாங்குபவர்களாக, பிறரை வஞ்சக மனப்பான்மையோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாம் நம் உறவுகளைச் சரி செய்து ஒப்புரவாகுவது காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது. இன்று உயிரோடு இருக்கும் நாம் நாளையும் உயிரோடு இருப்போம் என்பதற்கு எந்தவொரு உத்திரவாதமும் இல்லை. ஒருநாள் வரும், அன்று சரி செய்து கொள்ளலாம் என்றுகாலம் தாழத்துவதைவிட இன்றே சரி செய்து கொள்வதுநலம். உறவுகள் புனிதமானவை. ஒவ்வொரு மனிதரும் என் நண்பன்,என் சகோதரன்,என் சகோதரி என்ற சிந்தனையோடு செயல்படுகின்றபோது திருச்சபை இறையாட்சியின் திருப்பீடமாக அமைகின்றது. எனவே உறவுகளைச் சரிசெய்வோம், ஒருவரோடு ஒருவர் ஒப்புரவாகுவோம், மனிதத்தை புனிதமாக்குவோம்.



# சத்தியத்தின் சாட்சிகள் 9

Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**தூய முதலாம் சாந்தப்பர்** (Clement)

இவர் கி.பி. 35-இல் பிறந்தவர். புனித பேதுரு இருவரை ஆயர்களாக அர்ச்சித்தார் என்று கூறப்படுகிறது. இவரைச் சிலர் தூய பேதுருவுக்குப் பின் வந்த முதல் திருத்தந்தை என்றும் கூறுகின்றனர். ஆனால் தூய ஜெரோம் இவர் நான்காம் திருத்தந்தை என்கிறார்.

இவர் திருஅவைக்குக் குறிப்பாக கொரிந்து நகர திரு அவைக்குச் சிறந்த சேவை புரிந்தார். கொரிந்து மக்கள் பல காரணங்களுக்காகத் தங்களுக்குள் சண்டையிட்டுப் பிளவு பட்டு நின்றார்கள். இதைத் தூய பவுல் தானே அனுபவித்திருக்கிறார் என்பதை அவர் கொரிந்தியருக்கு எழுதிய கடிதங்களில் காணலாம்.

கி.பி. 96-ஆம் ஆண்டு ஒருநாள் கப்பல்கள் எண்ணற்றவையாய் மத்திய தரைக்கடல் ஓரத்தில் அமைந்த துறைமுகத்தில் வந்து நின்றன. உரோமை ஆயர் தன் தனிப்பட்ட தூதுவரை அங்கு அனுப்பியிருந்தார். கொரிந்து ஒரு இளந்திருஅவை. தூய பவுலால் நிறுவப்பட்டது. அந்த மக்களின் மனதில் அவருடைய நினைவு பசுமையாக இருந்தது. கொரிந்து எப்போதும் தூய பவுல் கண்ட அதே திருஅவைதான். எதற்கெடுத்தாலும் சண்டை சச்சரவு, எதிர்ப்பு தெரிவிக்கும் மக்கள் அவர்கள்.

தூய சாந்தப்பர் அங்கு பங்குகளை நியமித்து, தலைவர்களையும் ஏற்படுத்த தன் தூதுவரை அனுப்பியிருந்தார். அவர் மக்களை ஒன்று கூட்டி உரோமை ஆயர் அனுப்பிய கடிதத்தை வாசித்தார். அதைக் கேட்க மக்கள் ஒன்று கூடினர். ஆனால் பிரச்சினை அவ்வளவு எளிதில் தீர்வு காண முடியாததாக இருந்தது.

தூய சாந்தப்பர் தன் பெயருக்கேற்ப சாந்தமும் சாதுரியமும் ஞானமும் நிறைந்தவராக இருந்தார். சிறிதும் தயக்கமின்றி கொரிந்து திரு அவையை ஒழுங்கு செய்வதில் ஈடுபட்டார். அவர்கள் இன்னும் முழுமையாகக் கிறித்தவப் போதனைகளை அறிந்திருக்கவில்லை. இந்நிலையில் அவர்களுக்கு அங்குள்ள பிற மதத்தினர் கடைப்பிடித்து வந்த கலாச்சாரத்தையும் புராணக் கதைகளையும் பயன்படுத்திக் கிறித்தவத்தைப் போதித்தார். எடுத்துக்காட்டாக ஃபெனிக்ஸ் (Phenix) என்னும் பறவை ஆண்டுதோறும் தன் சாம்பலில் இருந்து உயிர் பெற்றெழும் என்னும் ஒரு கதை உண்டு. அதை வைத்து அவர்களுக்குக் கிறிஸ்துவின் இறப்பு, உயிர்ப்பு பற்றிப் போதிக்கத் தொடங்கினார்.

ஆயர் நாட்டை ஆளும் தலைவர்களுக்காக அதாவது தங்களைத் துன்புறுத்துவோருக்காக செபிக்க மக்களை அழைத்தார். இது மக்களிடையே ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்தியது. மிகவும் சிரமப்பட்டு அங்கு அமைதியையும் ஒற்றுமையையும் நிலைநாட்டினார். தூய சாந்தப்பர் போதித்தது அவர்களுக்குத் தூய பவுலே மீண்டும் வந்து போதித்தது போல இருந்தது.

தூய சாந்தப்பர் குழப்பமும் சண்டையும் உள்ள மக்களிடையே அமைதியையும் ஒற்றுமையையும் கொண்டு வந்ததோடு ஒருவரை ஒருவர் அன்பு செய்யக் கற்றுக்கொடுத்தார்.

**தூய சாந்தப்பரின் அழகான செபம் இதோ:** "ஆண்டவரே! எங்கள் மீது உமது அமைதியின் முக ஒளியை வீசச் செய்தருளும். எங்களை எல்லாப் பாவங்களில் இருந்தும் உமது வல்லமை நிறைந்த கரத்தால் விடுவியும். இம்மண்ணில் வாழும் மக்கள் அனைவருக்கும் ஒற்றுமையையும் அமைதியையும் அளித்தருளும்...

தூய சாந்தப்பரின் அமைதிப்படுத்தும் புண்ணியங்களோடு அவருடைய கடிதம் மிகவும் உதவியாக இருந்தது. அது முதல் நூற்றாண்டில் எல்லாத் திருஅவைகளிலும் வாசிக்கப்பட்டது.

இவர் உரோமைப் பேரரசன் த்ராஜான் என்பவரால் கைது செய்யப்பட்டார். அவர் அங்குச் சிறைக் கைதிகளுக்குப் போதிக்கலானார். எனவே சினமுற்ற பேரரசன் கி.பி 99-ஆண்டு அவரைக் கழுத்தில் நங்கூரத்தைக் கட்டி கடலில் மூழ்கடித்துக் கொன்றதாக மரபு கூறுகிறது.

**தூய அந்தியோக்கு இஞ்ஞாசியார்:** "நான் கடவுளின் கோதுமை மணி. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வெள்ளை அப்பமாக மாற விலங்குகளின் பற்களால் அரைபட வேண்டும்".

இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கம். படைவீரர் இஞ்ஞாசியாரை அவருடைய மரணத்தை சந்திக்க அழைத்துச் சென்றனர். அவர்களுக்கு இவர் ஒரு பெரும் அதிசயம். இஞ்ஞாசியார் அந்தியோக்கியாவின் ஆயர். உரோமை நகரை நெருங்க இன்னும் சிறிது தூரமே உள்ளது. ஆனால் அவர் இன்னும் போதிப்பதை நிறுத்தவில்லை. அவரும் அவருடைய தோழர்களும் வெகு தொலைவில் இருந்து அழைத்து வரப்படுகின்றனர். அவர்களிடம் வன்முறை இல்லை. மாறாகச் சாந்தமாக இருக்கிறார்கள். காவலர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

தன் கொடிய மரணத்தை நோக்கிப் பயணிக்கும் இஞ்ஞாசியார் புலம்பவில்லை. கடைசி வரை எழுதுகிறார், மனம் மாற்றுகிறார்.

அங்கு அந்தியோக்கியாவில் பேதுருவின் வாரிசாக இருந்தார். இவர் இந்நகரின் திருஅவையின் இரண்டாம் தலைவர். அந்த இளம் திரு அவையை ஒழுங்கு செய்து வழிநடத்தினார். அவர் மீண்டும் மீண்டும் சொல்லிவந்தது: "இயேசு கிறிஸ்து உயிர்த்துவிட்டார். வாருங்கள் அவர் வழி நடப்போம். இந்த அறிக்கை உரோமை வரை எட்டியது. உரோமைப் பேரரசன் த்ராஜானுக்கு எட்டுகிறது.

கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகுகிறது. நகரங்களில் மட்டுமல்ல, கிராமங்களிலும் இச்செய்தி பரவுகிறது. பேரரசனுடைய ஆட்சி ஆட்டங்காணுவதுபோல அவன் உணர்ந்தான். பேரரசனுடைய படைகளுக்கு அவர்களை எப்படி அடக்குவது என்று தெரியவில்லை. அவர்களுடைய இறைநம்பிக்கையை எப்படித் தடுப்பது?

அந்தியோக்கியாவின் ஆயரும் கிறிஸ்தவர்களும் படைவீரர்களுக்கு அஞ்சவில்லை. எனவே அவர்களைக் கைது செய்து சிங்கங்களுக்கு இரையாக்குவது என்று தீர்ப்பிடப்பட்டது. இந்தத் தண்டனை உரோமையில் நிறைவேற்றப்பட இருந்தது. கூண்டு வண்டிகளில் அடைத்து அழைத்துச் சென்றனர். இந்த நீண்ட பயணத்தைப் பயன்படுத்தி இஞ்ஞாசியார் பல கடிதங்களை எழுதினார். அவை கிறிஸ்தவ இறைஇயல் போதனைகளாகும். இதோ அதன் ஒரு சிறு பகுதி: "உங்கள் ஆயரை நோக்கித் திரும்புங்கள். ஒரே திருஅவைதான் இருக்க வேண்டும். ஒரே திருப்பலி, ஒரே திருமுழுக்கு, ஒரே தூய அகம், ஒரே இறைநம்பிக்கை, ஒரே ஆயர். அவரிடம் திரும்புங்கள். அவரின்றித் திருமுழுக்கு இல்லை. அவருக்குப் பணிந்திருங்கள். அவர் அனுமதிப்பது கடவுளுக்கு முன் உகந்ததாகும்."

இஞ்ஞாசியார் அரங்கத்தில் நுழையும் முன் இறுதியாக ஒரு முறை கூறுகிறார் "இந்த இயேசு கிறிஸ்துவைத்தான் நான் தேடுகிறேன். அவரே நமக்காக இறந்தவர். எனக்குத் தேவை அவர்தான். அவர் நமக்காக உயிர்த்தார். அவருக்குப் பிள்ளைகளைப் பெற்றுத் தரும் நேரம் வந்துவிட்டது. அந்த தூய ஒளியானவரை நான் அடைய விட்டுவிடுங்கள்."

அரங்கத்தின் கூச்சல் அமைதியாயிற்று. கொடிய விலங்குகளின் பற்களில் அவர் அரைபட்டார். அவர் பேச்சு நின்றது. மறைசாட்சியர் என்பவர் மற்றவர்களால் பலியடப்படுபவர் அல்லர். அவர் தன்னைத் தானே பலியாக்குகிறார்.

தொடரும்



# தமிழில் இயல்

– சுவாமி ஆ. லூயிஸ்.

கல், மண் தோன்றுமுன் தமிழ் மொழி தோன்றியது என்பது தமிழர்களின் மொழிப் பழமையானமொழி; படைப்பிற்கு முன் என்றால் எல்லாம் படைக்கின்றவரிடம் இருந்தது என்பது மெய்மை. அனைத்தும் அவரிடமிருந்து பிறக்கின்றன, இயங்குகின்றன, அவரில் சங்கமமாகின்றது என்பதும் மெய்மை. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுதான் என்பது போல பழைய மொழிகள் ஒருசில உண்டு, புதிய மொழிகளும் உண்டு, மறந்துபோன, மறைகின்ற மொழிகளும் மனித வரலாற்றில் உண்டு. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற நான்கு மொழிகளும் திராவிட மொழிகள் என்பர். இம் மொழிகளுக்குள் தொடர்பு உண்டு. ஒவ்வொருவருக்கும் தாய்மொழி என்று உண்டு. அதையாரும் மறந்துவிடக் கூடாது. இந்தியர்கள் எல்லாரும் மொழி வல்லுநர்கள், பல மொழிகளில் பேச, பழக திறமை உள்ளவாகள். மொழிப்பற்று மொழி வெறியாக மாறிவிடக்கூடாது. ஒவ்வொரு மொழிக்கும் இயல் இசை நாடகம் என்று பிரிவுகள் உண்டு. இலக்கிய மொழி, பேசும் மொழி, கொச்சை மொழி என்ற உட்பிரிவுகளும் உண்டு. இன்றைய காலத்தில் ஆங்கிலம் அதிகமாக வளர்வதை நாம் அறிவோம். நமது நாட்டிற்கு ஒரு மொழி என்பது இயலாத முயற்சியாகும். இந்நாள் வாழ்ந்து வந்ததைப் போல பன்மொழி இந்தியர்களாகவே இருப்பது நல்லது. யார்மீதும் எதையும் திணிக்க அதிகாரம் இல்லை, அதிகாரம் கொடுக்கப்படவும் இல்லை. ஆட்சியோ, கட்சியோ மக்கள் மீது எதையும் திணிக்காமல், பரிந்துரைக்கலாம்.

**செவிவழி மரபு:** மேலை நாடுகள் செய்திகளைத் தாளில் பதிவு செய்தன, கீழை நாடுகள் மரபு வழியாக மக்களின் செவிகளில் பதிவு செய்தன. பாட்டி கதைபோல் காரியங்கள் நமது நாட்டில் பாட்டி வைத்தியம், கசாயம், இயற்கை மூலிகைகள் என இடம் பெற்றன.

செவிவழிமுறை படிப்படியாக ஓலைச் சுவடிகளாக வடிவம் பெற்றன. மொழி சிக்கலில் சமஸ்கிருதமா தமிழா என்ற போட்டியில் வடகலை தென்கலை மோதல் இடம்பெற்று, தமிழ் வழி பாதுகாக்கப்பட்டு வருகிறது. திராவிடர் ஆரியர் போராட்டம் இடம் பெற்று பலவிதமான பாதிப்புகளைப் பெற்றிடினும் தமிழ்வழி தொடர்வது கடவுளின் கிருபையாகும். இன்னமும் சில கிராமங்களில் கதாகால ஷேபம் இடம் பெறுவதுண்டு.

**மாந்திரம் - சூத்திரம்:** பரவலாக எழுத்துக்கலை வளர்வதற்கு முன் நமது முன்னோர்கள் தங்கள் ஞானத்தையும் வாழ்வு முறையையும் மந்திரங்கள், சூத்திரங்கள் வழியாகப் பகிர்ந்து கொண்டனர். அறம் பொருள் இன்பம், வீடு, என்ற வாழ்வின் குறிக்கோள்களைத் திருவள்ளுவர் ஆயிரத்து முந்நூற்று முப்பது குரல்களில் பதிவு செய்தது ஒரு மிகப்பெரிய புதையலாகும். இவ்வாறு ஒப்பாரிகை, கும்மி, கதாகால ஷேபம் எல்லாம் இக்காலக்கட்டத்தில் இடம் பெற்றது என்பதை உணர்வோம். இக்காலக்கட்டத்தின் வளர்ச்சியை நாம் எல்லோரும் அனுபவித்துக் கொண்டு வருகிறோம்.

எழுத்துக்கலை அடுத்தக் கட்டத்தில் ஓலைச் சுவடிகளாக இடம் பெற்றன. காலங்கள் மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. சிறுபிள்ளைகள்கூட தொடர்பு சாதனங்களை எவ்வளவு சாதுரியமாக, விரைவாக விளையாட்டுக்கும் மற்ற காரியங்களுக்கும் பயன்படுத்துவதையும் வீட்டிலும் பள்ளியிலும் பொது இடங்களிலும் கண்டு வருகிறோம். நல்லது பல இடம் பெறுகின்றபோது, சில தீமைகளும் தவறான செய்திகளும் வருவதற்கு வாய்ப்புண்டு இதில் நாம் கவனமாக விழிப்புணர்வோடு இல்லை என்றால் இவ்வுலகம் நம்மை ஏமாற்றும்; நாமும் இவ்வுலகை ஏமாற்ற இடம் உண்டு. கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையில், நாம் எடுத்துக்காட்டாய் இருப்பது தேவை என்பதை மறந்துவிடக் கூடாது.

**கதைகள் கட்டுரைகள்:** மந்திரம் சூத்திரம் என்று இடம் பெற்ற வளர்ச்சி இப்போது கதைகள், கட்டுரைகள் என வளர்ந்து விரிவாக்கம் பெற்றது. பரமார்த்த குருவின் கதைகள், குரு, சீடர் என்ற பண்பாடு வளர்ச்சியின் விளைவாக வெளிப்பட்டன. தினமலர், வாரமலர், மாதமலர், காலாண்டுமலர், ஆண்டுமலர் என்று வியப்புக்குரிய விதத்தில் மொழியும் பண்பாடும் இடம் பெற்றது. அச்சடிக்கும் கலையும் வளர்ந்து வந்தது. திருநூல் என்ற விவிலியம் பல்வேறு மொழிகளில் பதிவானது பெருமைக்குரியது. அவ்வாறே திருக்குறளும் பல்வேறு மொழிகளில் வெளியிடப்பட்டது தமிழின் பெருமையை உலகறியச் செய்தது. தமிழர்களும் உலகம் முழுவதும் பரவி இருந்தது பெருமைக்குரியது. திரைகடல் ஓடியும் திரவயம் தேடு என்ற வியாபாரப் பயணங்கள் மொழியின் அறிமுகத்திற்கு அடித்தளமாய் அமைந்தது.

திராவிட மொழிகள், ஆரிய மொழிகள், மேலைநாட்டு மொழிகள், பேச்சு வழக்கில் இருந்த மொழிகள், ஆதிவாசி மக்களின் மொழிகள் என மொழிப் புரட்சி உலகை ஒன்று சேர்த்தது. போட்டிகள் பூசல்கள் இருப்பினும் இவைகளின் பயனாக மொழி வளர்ந்தது. ஒவ்வொரு மொழியும் ஒவ்வொரு மக்கள் சமூகத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தியது, வளர்ச்சி இடம் பெற்றது. இப்போது ஆங்கிலம் என்ற உலகளாவிய மொழி ஆதிக்கம் செலுத்தி வருகிறது. நமது பிள்ளைகள்கூட தாய்மொழியின் மீது கவனம் செலுத்தாது, ஆங்கில மோகம் இடம் பெறுவதைச் சீர் தூக்கிப்பார்த்து செம்மைப் படுத்துவது கட்டாயம். பிற மொழிகளையும் இன்றைய உலகம் தெரிந்து கொள்வது தேவைப்படுகிறது ஏனெனில் உலகம் ஒரு பெரிய கிராமமாக உருவாகி வருகிறது.

**நவீன நாகரீகம்:** நவீன தொடர்பு சாதனங்கள் வியப்புக்குரிய முறையில் இன்று வளர்ந்துள்ளது. நொடிப் பொழுதில் அனைத்தையும் அனைவரும் அறியக்கூடிய வாய்ப்பிருக்கின்றது. இன்று கைப்பேசி, அலைப்பேசி போன்ற சாதனங்கள் மிகவும் பயன்மிக்கதாக இருக்கின்றது. நல்லதிற்கும் நல்லது இல்லாதவற்றிற்கும் இவைகளை பயன்படுத்த வாய்ப்பு இருப்பதினால், அனைவரும் கவனமாய் விழிப்பாய் இருப்பது தேவை. பொய், மெய், ஆகலாம், மெய் பொய் ஆகலாம் நல்ல மனது உள்ளவர்கள் நல்லதை விதைப்பார்கள், திருட்டுமனது உள்ளவர்கள் விளையாட்டிற்கும் வினைக்கும் தீயவைகளைப் பரப்பலாம்.

எது எப்படி இருப்பினும் பயன்படுத்துகின்ற பேராளர்கள் அறிவுத்திறனோடு அன்பையும் இவைகளோடு நம்பிக்கையையும் ஈடுபடுத்தினால் நல்லது. இதை கடவுள் சொல்வாரா அல்லது இயேசு சொல்வாரா அல்லது திருச்சபை சொல்லுமா அல்லது உமது பெற்றோர்கள் சொல்வார்களாக என்று நொடிப் பொழுது நினைத்து பயன்படுத்தினால் பயன் மிக்கதாயிருக்கும். இயேசு நம்மை வழி நடத்தினால், அல்லது தூய ஆவியால் வழி நடத்தப்பட்டால் யாரும் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. உண்மை ஒவ்வொருவருக்கும் ஆதாரமாக அடித்தளமாக அமையும். அன்றாடம் நாம் படிக்கின்ற பார்க்கின்ற செய்திகளை அப்படியே முழுமையாக நம்ப முடியாது. ஒவ்வொரு வெளிப்பாட்டிற்கும் பின்புலத்தில் சில சூழ்ச்சிகள் அல்லது நேர்மையாக அணுகுமுறைகள் இருக்க வாயப்புண்டு. காய்தல் உவத்தல் அகற்றி ஆய்தல் அறிவுடையார் திறனாகும். அறிவும் நம்பிக்கையும் இணைந்தால் மிகவும் நல்லது. இயேசு கிறிஸ்துவின் வழிச்செல்வது கிறிஸ்தவர்களுக்கு நல்லது. நானே வழி, உண்மை, வாழ்வு என்ற இயேசுவின் வழிச் செல்வதே கடவுளின் திருவுளத்திட்டம் எனவே அவரைப் பின்பற்றுவோம்.



# இறையாட்சிப் பணியில் பெண்கள்

- அருட்சகோதரி **டெரன்ஸ்மேரி,** FIHM கடலூர்

## கருத்துரை – 41

## சிப்போரா (Zipporah)

**(வி.ப. 2:21-22,4:20,24-26, 18:2-6, எண். 12:1)**

### யார் இந்த சிப்போரா?

மிதியான் நாட்டைச் சார்ந்த **மோயீசனின் மனைவி** ஆவார்.

**கேர்சோம், எலியேசர்** என்ற இரு புதல்வர்களுக்குத் தாயாவார்.

### சிப்போரா என்பதன் பொருள்

“சிப்போரா” என்ற சொல்லிற்கு **“பறவை”** என்று பொருள் கூறுகிறார்கள்.

### சிப்போரா குறித்த சிறுகதைச் சுருக்கம்

நாட்டிய நங்கையாம் நைல் நதியிலிருந்து எகிப்திய இளவரசியால் தூக்கி எடுக்கப்பட்டு, இளவரசன் போல் வளர்க்கப்பட்ட மோசே, வளர்ந்தபின் தான் ஒருஎபிரேயன் என்பதை அறிந்து கொள்கிறார். எகிப்தில் எபிரேயர் படும் கொடுமைகளைக் காணும்போதெல்லாம் அவரது இரத்தத்தின் கொதிநிலை உயர்ந்தது.

சண்டையிட்டுக்கொண்டிருந்த எபிரேயர் இருவரை சமாதானம் படுத்த மோசே முற்பட்டார். அதில் ஒருவன், மோசே எகிப்தியனை கொலை செய்ததை நினைவூட்டி, அவரின் சமாதான முயற்சிக்கு தடை செய்தான். தன் குற்றம் பாரவோன் மன்னனின் காதுகளுக்கு எட்டிவிடும் என்ற அச்சத்தில், மன்னனிடமிருந்து தன்னுயிரைக் காத்துக்கொள்ள எகிப்தைவிட்டு தப்பியோடினார் மோசே. அப்படி செல்லுகின்ற வேளையில் மிதியான் நாட்டு கிணற்றடி ஒன்றில் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.

அப்போது மிதியானின் அர்ச்சகரது ஏழு புதல்வியரும் தம் தந்தையின் ஆட்டுமந்தைகளுக்கு நீர் நிரப்பிக் கொண்டிருந்தார்கள். இப்புதல்வியர்களை அங்கு வந்த இடையர்கள் விரட்டிக்கொண்டிருந்ததைக் கண்ட மோசே இடையர்களை விரட்டி பெண்களைப் பாதுகாத்தார். மோசே செய்த இந்த நன்மைக்குக் கைமாறாக அர்ச்சகர் தம் புதல்வியருள் ஒருவரான சிப்போராவை மோசேவுக்கு மணம் செய்து வைத்தார் (விப.2:21). இவ்வாறு மிதியானில் வாழ்க்கை நடத்தத் தொடங்கினார் மோசே.

(எகிப்தில் **அடிமை எபிரேயன் ஒருவனைக் காப்பாற்றினார்** மோசே.

மிதியானில் **ஏழு புதல்வியரைப் பாதுகாத்தார்** மோசே.)

அன்றைய சமூகத்தில் **அடிமைகளும், பெண்களும்**, விளிம்பு நிலையில்தான் இருந்தார்கள். அவர்களை மீட்டெடுக்கும் பணிக்காய் தந்தைக் கடவுள் ஒரு சிறந்த பணியாளரைத் தேடிக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் அவர் கண்ணில் பட்டவர்தான் மோசே.

### இறையாட்சிப் பணியில் சிப்போராவின் பங்கெடுப்பு.

மோசே மிதியானில் ஆண்டவரது அழைப்பைப் பெற்று மீண்டும் எகிப்திற்குச்செல்ல ஆண்டவரால் பணிக்கப்படுகிறார். ஆண்டவரிடமிருந்து வியத்தகு ஆற்றல்களைப் பெற்றுக்கொண்ட மோசேயோடு சிப்போராவும் அவரது புதல்வர்கள் இருவரும் உடன் பயணிக்கின்றனர்.

“வழியில் ஆண்டவர் மோசேயை கொல்லப்பார்த்தார்.” (வி.ப. 4:24)

சிந்தனைக் களஞ்சியமான **சிப்போரா** இதனைக் கண்டுணர்ந்த நொடிப்பொழுதில் தானே துணிகரமான ஒரு நற்செயலைச் செய்தார். தம் கணவரை எதிர்பாராத தாக்குதலிலிருந்து காப்பாற்ற கூரியகல்லொன்றை எடுத்து தம் மகனுக்கு விருத்தசேதனம் செய்தார். அதைக்கொண்டு மோசேயின் பாதங்களைத் தொட்டு, **“நீர் எனக்கு இரத்த மணமகன்”** என்றார். பின்பு ஆண்டவர், அவரை விட்டு விலகினார். அப்போது சிப்போரா, விருத்தசேதனத்தின் வழியாய் **“நீர் எனக்கு இரத்த மணமகன்”** என்றார். (வி.ப. 4:24-26)

சிப்போரா, தம் மகனுக்கு விருத்தசேதனம் செய்து அவ்வுதிரத்தைக் கடவுளுக்குக் காணிக்கையாக்கி தம் கணவராகிய மோசேயுக்கு உயிர்பிச்சைத் தருமாறு கதறி அழுது, கண்ணீருடன் செபித்திருக்கவேண்டும். ஆண்டவரின் அழைப்பைப் பெற்ற தனது கணவனை மீட்க சிப்போரா செய்த உச்சக்கட்ட தியாகம் இது என்றே சொல்லவேண்டும்.

சிப்போரா என்ற தாய் மாபெரும் துணிச்சலை வரவழைத்துக்கொண்டு தான் தனது பிள்ளைக்கு விருத்தசேதனம் செய்திருக்க வேண்டும்.

ஒரு தாயின் கண்ணீர், ஒரு மாசற்ற மனைவியின் தியாகம் ஆண்டவரின் மனதைத் தொடவே ஆண்டவர் அவரை விட்டுவிலகினார். மோசேயும் உயிர் தப்பினார்.

### சிப்போராவின் தியாக சிகிச்சை.

தியாக உணர்வுகளுடன் இறைவேண்டல் செய்து,
இறைவனது இசைவைப் பெற்றால்,
சிலந்தியின் வலைக்குள்ளும் சித்திரம் வரையமுடியும்.

தியாகச் செயல்களுடன் சிரம் தாழ்த்தி,
ஆண்டவரின் அருளைப் பெற்றால்,
சிங்கத்தின் குகைக்குள்ளும் சிநேகிதர் அமரமுடியும்.

தியாகக் கண்ணீருடன் கரம் ஏந்தி
கடவுளின் கருணையைப் பெற்றால்,
சிப்பியின் ஓட்டிற்குள்ளும் சிம்மாசனம் அமைக்கமுடியும்.

தியாகப் பலியுடன் தந்தையின் பாதத்தைப் பிடித்து
தந்தையிடமிருந்து ஆற்றல்களைப் பெற்றால்,
சிமினி விளக்கிற்குள்ளும் சிற்றெறும்பு வசிக்கமுடியும்.

**அன்பு வேண்டுமா! அற்புதம் வேண்டுமா!**
**உறவு வேண்டுமா! உதவி வேண்டுமா!**
**வளமைவேண்டுமா! மன்னிப்பு வேண்டுமா!**
**மகிழ்ச்சிவேண்டுமா! சுகம் வேண்டுமா!**
**தியாகத்துடன் செபம் செய்திடுவோம்.**
**தந்தை கடவுள் எல்லாவற்றையும் தருவார்.**



# வசந்தமாய் வாழ்வு

- அருட்பணி. **M. ஜான் கென்னடி,**
துணை முதல்வர், தூய வளனார் மேல்நிலைப்பள்ளி
திருப்பாப்புலியூர், கடலூர்.

## 8. இனியதொரு விதி செய்வோம்

விதி வலியது, விதி யாருக்கும் மாறாது, யாராலும் மாற்றவும் முடியாது என்கிறார்கள். ‘விதி’ என்று ஒன்று இருந்தால், அதிலிருந்து ‘விலக்கு’ என்ற ஒன்றும் உண்டு. அதைத்தான் விதிவிலக்கு என்கிறார்கள். இந்த விதிவிலக்கை நமக்குப் பெற்றுத் தருவது யார்? நமக்கு நாமே பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு துணை புரிவதுதான் மதி. மதியை கடவுள் என்றும், ஞானம் என்றும், தெளிந்த ஓர் அறிவு என்றும் பொருள்கொள்கிறார்கள். ‘மனமிருந்தால் மார்க்கமுண்டு’ என்பது பழமொழி. நம் மனம்தான் விதியை எழுதும் கை. இதை உணர்ந்தால் விதியை மாற்றியமைக்கலாம்.

இரண்டு நண்பர்கள் நீண்ட பயணம் மேற்கொண்டார்கள். களைப்பினால் பசி வயிற்றைக் கிள்ளியது. இரவு நேரம் என்பதால் வழியில் உண்பதற்கு எதுவும் கிடைக்கவில்லை. வேறு வழியில்லை, இனி கடவுள்தான் கதி என்று வேண்டிக்கொண்டார்கள். அவர்கள்முன் ஒரு பெரியவர் எதிர்பட்டு, ‘வாருங்கள் நான் உங்கள் பசி ஆற்றுகிறேன்’ என்று அழைத்துச் சென்றார். இரண்டு அறைகளைக் காட்டி ‘இரவு இங்கே தங்கி பசியைப் போக்கி ஓய்வெடுங்கள்’ என்று சொல்லி ஆளுக்கு ஒரு சாவியைக் கொடுத்தார்.

மறு நாள் காலையில் பெரியவர் வந்து முதல் அறையை பார்த்தார். அங்கே இருந்தவன் வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டு உறங்கிக்கொண்டிருந்தான். இரண்டாவது அறையை பார்த்தபோது, அவன் வயிற்றில் ஈரத் துணியைச் சுற்றிக்கொண்டு பசியோடு உட்கார்ந்திருந்தான். பெரியவரை பார்த்து ‘இப்படி என்னை ஏமாற்றி விட்டீரே’ என்று கோபமாக கேட்டான். இருவருக்கும் ஒரே மாதிரி அறைதான் ஒதுக்கினேன். உன்னோடு வந்தவன் மட்டும் எப்படி சாப்பிட்டான்?...வா, கேட்போம்’ என்றார். அவன் சொன்னான், ‘இங்கே வந்து பார்த்தேன். சமையலுக்கு வேண்டிய எல்லாம் இருந்தன. சமைத்தேன். சாப்பிட்டேன்!’ என்றான். ‘நீ ஏன் சமைக்கவில்லை’ என்று பெரியவர் இவனை கேட்க, ‘நான் சாப்பாடு ரெடியா இருக்கும்னு பார்த்தேன்’ என்றான். பெரியவரோ, ‘மனிதர்களே! சாவியை உங்களிடம் கொடுக்க வேண்டியது எனது வேலை. சமைக்க வேண்டியது உங்கள் வேலை’ என்று சொல்லி மறைந்தார்.

எந்தவித முயற்சியும் இல்லாமல் ‘தெய்வம் பார்த்துக்கொள்ளும்’ என்று கோவிலையே சுற்றி வருபவனைப் பார்த்து, ‘உனக்கு அனைத்துவிதமான ஆற்றலையும், அறிவையும் கொடுத்து வாழ்க்கைக்குள் அனுப்பினால், என் பெயரைச் சொல்லிக்கொண்டு, கொடுத்த அருமையான வாழ்வை வீணடிக்கிறாயே!’ என்று அந்த தெய்வமே சலித்துக்கொள்ளும். “தனக்கு ஆண்டவன் கொடுத்துள்ள அறிவாற்றலைப் பயன்படுத்தாமல், கண்மூடித்தனமாக நம்புகிறவனை மன்னிப்பதைவிட, தன்னுடைய பகுத்தறிவை முறையாகப் பயன்படுத்தி நம்பாமலிருக்கும் ஒருவனைக் கடவுள் மன்னித்துவிடுவார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்” என்றார் விவேகானந்தர்.

‘கடவுளை நம்பு. அதே நேரத்தில் உனது ஒட்டகத்தையும் மறவாமல் கட்டி வை’ என்றார் நபிகள் நாயகம். ‘தமிழா, தெய்வத்தை நம்பு. தெய்வம் சோம்பேறிகளுக்கு உதவுவதில்லை’ என்றான் பாரதி. விதியைப் போற்றினால் சோம்பலில்தான் உழல வேண்டும். முயற்சியும், உழைப்பும் இல்லாத மனிதனுக்கு வாழ்க்கையும் இல்லை, வளர்ச்சியும் இல்லை. நமது விதியைப் படைப்பது நாமே என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அதற்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் நமக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.

நாம் எதைப் படைத்தோமோ அதை நம்மால் அழிக்கவும் முடியும். பிறரால் படைக்கப்பட்ட ஒன்றை ஒருபோதும் நம்மால் அழிக்க முடியாது. பிறப்பும் இறப்பும் நம் கையில் இல்லை. எங்கு, எப்போது, யாருக்கு நாம் பிறப்போம் என்பதும், எங்கு, எப்போது, எப்படி இறப்போம் என்பதும் நம்மால் தேர்வு செய்ய முடியாதவை. அவை விதித்தபடியே நடக்கின்றன. ஆனால் இரண்டுக்கும் இடைப்பட்ட வாழ்வை செம்மையாக்கும் சக்தி நம்மிடமுண்டு.

எப்போது நாம் போடும் திட்டம் தோல்வியுறுகிறதோ, அப்போது நமக்கு மேலானவன் அதை நடத்துகிறான் என்று பொருள். வாழ்வில் சில நிகழ்வுகள் நமது கட்டுப்பாட்டையும் மீறி நிகழ்ந்துவிட்டால், நடந்து முடிந்ததைக் குறித்து வருந்தாமல், அதையே நினைத்து முடங்கிப்போகாமல், அதை ‘விதியின் விளையாட்டு’ என்று ஆறுதல் அடைவது நன்று. மாற்ற முடியாததை ஏற்றுக்கொள்ளும் மனநிலை வேண்டும். “எந்த ஒரு துரதிர்ஷ்டத்தின் விளைவுகளையும் சமாளிப்பதற்கு முதல்படி, நிகழ்ந்துவிட்டதை அப்படியே ஏற்றுக்கொள்வதுதான்” என்கிறார் வில்லியம் ஜேம்ஸ். விதி ஒரு கதவை மூடும்போது, நம்பிக்கை இன்னொரு கதவைத் திறக்கிறது. திறந்த கதவைத் தேடிச் செல்வோம். மூடியக் கதவையே பார்த்துக்கொண்டிருந்தால், விதி நம்மை வெல்வது உறுதி.

நோய் விதியென்றால், நோயை மருந்து தீர்க்கும் என்பதும் விதிதான். அதைப்போலவே உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும் என்பதும் விதிதான். விதியை நம்புபவர்கள் இந்த விதியை தெரிந்துகொள்ள வேண்டும். எனவேதான், மனம் தளராமல் இடைவிடாது முயற்சி செய்பவர், விதியையும் புறமுதுகு காட்டக் காண்பர் என்பதை,

*ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்*
*தாழாது உஞற்று பவர்.*

என்கிறார் வள்ளுவர். நியூட்டனின் மூன்றாம் விதி, ‘ஒவ்வொரு விசைக்கும் சமமான எதிர்விசை உண்டு’ என்கிறது. அதேபோல் ஒவ்வொரு வினைக்கும் ஏற்ற விளைவுகள் உண்டு. வினை வேறு, விதி வேறு அல்ல. வினை என்பது நாம் செய்யும் செயல். அவனவன் செயலுக்கேற்ற விளைவுகளே நிழலாகத் தொடரும். நம் வாழ்க்கை நம் செயல்களின் விளைவுதான். நற்செயல்கள் செய்தால் நன்மையும், தீச்செயல்கள் செய்தால் தீமையும் விளையும் என்பதுதான் விதி. செயல்களில் மாற்றம் கொணருவோம், இனியதொரு விதி செய்வோம்.

வசந்தம் வீசும்...



# உழவு



அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்,
உதவி பங்குத்தந்தை, பேராலயம், புதுவை.

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர் - குறள் 1033**

**விளக்கம்: உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர், ஏனென்றால், மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது.**

உலகப் பொது மறையாம் திருக்குறளில், திருவள்ளுவர் உழவைப் பற்றி இவ்வளவு மேன்மையாக எழுதியுள்ளார். உழுபவர்களைப் பின்பற்றித்தான் இந்த உலகமே செல்கிறது என்று கூறுகிறார். இது முற்றிலும் உண்மையே. மனிதன் முதன் முதலில் செய்தத் தொழில் விவசாயம். விவசாயத்தைச் சார்ந்துதான் ஏனைய தொழில்கள் வளர்ந்தன. பிறதொழில்கள் இல்லையென்றாலும் மனிதனால் உயிர் வாழ இயலும். ஆனால் உழவு இன்றி உலகில் மனிதன் உயிர்வாழ இயலாது. கற்கால மனிதனிடத்தில் அறிவியல் இல்லை, தொழில் நுட்பம் இல்லை மற்றும் தொலைத் தொடர்புவசதிகள் இல்லை. இருப்பினும் மனிதன் நலமாக, வளமாக வாழ்ந்து வந்தான், காரணம், அவனிடத்தில் இருந்த உழவுத்தொழில்.

இவ்வாறு உலகின் உயிர்நாடியாக இருக்கின்ற உழவின் நிலையானது இன்று மிகமிக பரிதாபத்திற்குரியதாக மாறிக்கொண்டிருக்கிறது. விவசாயம் என்பது தரம் தாழ்ந்த தொழிலாக, படிக்காத கல்வியறிவற்றவர்கள் செய்யும் காட்டு மனிதத் தொழிலாக பார்க்கப்படுகிறது. உழவின் உன்னதம் இன்று போற்றப்படுவதில்லை. எல்லாம் இருப்பினும் உழவு இல்லையேல் உயிர் வாழ்தல் இயலாது என்பதை நவீன காலத்து நாகரீக நாட்டு மனிதன் மறந்துவிட்டான் போலும்! ஓர் அறிவியல் விஞ்ஞானியின் பணி எவ்வளவு முக்கியமானதோ அதே அளவிற்கு, ஏன் அதைவிட முக்கியமானது ஒரு விவசாயியின் பணி. இதிலே எது உயர்ந்தது? விஞ்ஞானி இன்றி விவசாயியினால் வாழ இயலும், ஆனால் விவசாயி இன்றி விஞ்ஞானியால் வாழ இயலாது.

உழவன் முன்செல்ல, அவன் பின்னால் இந்த உலகமே செல்கிறது என்றார் வள்ளுவர். ஆனால் இன்றோ, எல்லோருக்கும் பின்னால் கடைசியாக உழவன் செல்லவேண்டிய அவலநிலை. ஓர் அறுவடையைச் செய்து அதன் பலனை பார்ப்பதற்குள் உழவன் படும் பாடுகள் எண்ணிலடங்கா! முதலில், பருவ மழை பருவம் தவறாது பெய்திடவேண்டும், அப்படியே மழை பெய்தாலும் நிலத்தைப் பண்படுத்த, விதைப்புச் செய்ய போதுமான நிதி நிலைமை கையில் இருக்கவேண்டும், அப்படியே விதைப்புச் செய்துவிட்டாலும் புயல், சூறாவளி, வெள்ளம் இவற்றை கடந்து விதைத்தவை அறுவடைக்கு வந்தாகவேண்டும், பாசனத்திற்கு போதிய மின்சாரம் கிடைக்க வேண்டும். இவற்றையெல்லாம் கடந்து அப்படியே அறுவடை செய்துவிட்டாலும், கூலியாள்களுக்கு கொடுத்ததுபோக மீதியுள்ளவைக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும். தடகள வீரர் தடைகளைத் தாண்டி தாண்டி ஓடுவது போல உழவன் ஒவ்வொரு நாளும் பல தடைகளைத் தாண்டிக் கொண்டிருக்கிறான்.

அரசு ஏராளமான சலுகைகளை அறிவிக்கிற போதும் பயனேதுமில்லை. அணையிலிருந்து திறக்கப்படும் நீரானது கடைமடைவரை சென்று சேருவதே இல்லை, அதற்குள், இடையில் இருக்கும் சில புறம்போக்குகளுக்கு சென்று பாய்ந்து விடுகிறது. உழைத்ததை அளந்து பார்த்தால் கையில் உள்ள உழக்கு மட்டும்தான் உழவனுக்கு மிச்சமிருக்கிறது. ஏராளமான பெருச்சாளிகள் உழைக்காமலே அவன் உழைப்பை உண்டு கொழிக்கின்றன. அணை நீர் கடைமடை மட்டும் சென்று சேரல் வேண்டும், அப்போதுதான் உலகம் உயிர்வாழும். உழவின் உன்னதம் போற்றப்பட வேண்டும், விவசாயியின் நிலை ஏற்றம் பெறவேண்டும்.



# அன்பு ஒன்றே போதும்

– அல்போன்ஸ் மோசஸ் -புதுச்சேரி-9.

கோபால். ஆம் அதுதான் அவனது பெயர். செய்யும் தொழில் தெரு வியாபாரம். போகின்ற வழியில் ஓர் அரச மரம். பக்கத்தில் ஓர் அழகான தாமரைக் குளம். அரச மரத்தின் அடியில் ஒரு சுமைதாங்கிக் கல். அந்தக் கல்லின் மீது சுமைகளை இறக்கி வைத்துவிட்டு கொஞ்ச நேரம் குளத்தில் சென்று கை, கால் முகம் அலம்பிக்கொண்டு தன் பயணத்தைத் தொடர்வதுதான் கோபாலின் தினசரி வாடிக்கை.

அன்றும் அப்படித்தான் தன் வியாபாரப் பயணத்தைத் தொடங்கினான் கோபால். என்றுமே இல்லாமல் அன்று அந்த மரத்தின் அடியில் ஒரு குருஜி அமர்ந்து கொண்டு தியானம் செய்வதைப் பார்த்தான். அவர் கண்ணை மூடிக்கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அவரது அன்பான, மலர்ந்த முகம் அவனை மிகவும் கவர்ந்தது. அவரைத் தொந்தரவு செய்யாத வண்ணம் சப்தமின்றி அவரது திருவோட்டில் ஒரு நாணயத்தைப் போட்டு விட்டு வியாபாரத்திற்கான நடையைக் கட்டினான்.

என்ன ஆச்சரியம்! அன்றைய தினம் வியாபாரம் அமோகமாக நடைபெற்றது. எடுத்துச் சென்ற அனைத்தும் விற்றுத் தீர்த்துவிட்டது. ஒவ்வொரு நாளும் தொடர்ந்து அப்படியே செய்தான். வியாபாரம் அமோகம். அதைவிட ஒருபடி மேலாக யாருமே கடன் சொல்லாமல் பொருட்களும் விற்பனையாயின. பல மாதங்களாக நின்று போயிருந்த வாராக்கடன்களும் வந்து சேர்ந்தன. வாழ்க்கையில் முன்னேற்றம் தலை தூக்கி வியாபாரம் பன்மடங்கு அபிவிருத்தியாகி அவன் கையில் லட்சக்கணக்கில் பணம் புரள ஆரம்பித்தது.

தெரு வியாபாரம் இப்போது கடைவியாபாரமானது. இதற்கெல்லாம் காரணம் அந்தத் துறவியின் **“சக்தி”**தான் என்று அவரைத் தினமும் தரிசித்து திருவோட்டில் நாணயத்தை நாணயத்துடன் போட்டு வந்தான் கோபால். ஆனால் ஒருநாள் கூட இருவரும் பார்த்துக்கொண்டதோ பேசிக் கொண்டதோ கிடையாது.

திடீரென்று ஒருநாள் மரத்தடி சக்தி குருஜியைக் காணவில்லை. மனம் சோகத்தில் சிக்கித் தவித்தது. அக்கம் பக்கத்தில் விசாரித்து அவரது ஆசிரமத்தை அடைந்தான். அங்கே அவர் ஒரு வயதான குருஜியின் காலடியில் விழுந்து “குருவே உங்கள் ஆசியில் எல்லாம் சிறப்பாக நடைபெறுகிறது” என்று கூறி அவரிடமிருந்து ஆசி பெறுவதைக் கண்டு அசந்து போனான். இந்தக் குருவின் சக்தியே நமக்கு அபார வளர்ச்சியைக் கொடுத்த போது பெரிய குருஜியின் சக்திவரத்தை இத்தனை நாள் நாம் பெறாமல் வீணாக்கிவிட்டோமே, அப்போதே இவரிடம் வந்திருந்தால் நாம் எப்போதோ கோடீஸ்வரனாகியிருப்போம் என்று ஆசைக் கனவுகள் அலைபாய்ந்தன. அப்போது அவனைக் கடந்து சென்ற சக்தி குருஜியை இப்போது அவன் கண்டு கொள்ளவேயில்லை.

மறுநாள் நேரே ஆசிரமத்திற்கு வந்து பெரிய குருஜியின் திருவோட்டில் ஒரு தங்கக் காசினைக் காணிக்கையாக்கிவிட்டு கடை வியாபாரத்தை ஆரம்பித்தான். ஆனால் அன்றைய தினம் அரசாங்க அதிகாரிகள் வந்து கடையைச் சோதித்துவிட்டு வரிஏய்ப்புச் செய்ததாக அவன் மீது வழக்குத் தொடுத்தனர். மனம் வருந்திய கோபால் தப்புக்கணக்கு போட்டு நஷ்டத்தில் சிக்கிக் கொண்டேனே என வருந்தி பெரிய குருஜியிடம் நடந்த விஷயங்கள் அனைத்தையும் கூறினான்.

ஏளனச் சிரிப்போடு இவைகளைக் கேட்ட குருஜி மகனே முன்பு அன்போடு கொடுத்தாய் அது அதிகமாகத் திரும்பக் கிடைத்தது. ஆனால் இப்போது பேராசையோடு கொடுத்தாய் அது பேராபத்தைத் தந்துவிட்டது என்றார். சக்தி குருஜி அங்கே வந்து இவர்கள் பேசியதைக் கேட்டு லேசாக புன்னகைத்தார். **நல்ல எண்ணங்கள் நன்மை பயக்கும் என்பதையும் ‘தீதும் நன்றும் பிறர் தரவாரா’ என்ற உண்மையையும் உணர்ந்த கோபால் அன்பு ஒன்றே போதும் என்று எண்ணிக் கொண்டே வீட்டிற்குச் சென்றான்.**

**அன்பின் உன்னதத்தை இனியாவது உணர்ந்துகொள் என்றார். வியாபாரி இரண்டு துறவிகளிடமும் மன்னிப்பு கேட்டார்.**

## குறுக்கெழுத்து சிறப்புப் போட்டி – 200
### ஏப்ரல் மாத போட்டியின் முடிவுகள் (தொடர்ச்சி...)
### இறை ஆசீரும் பாராட்டும் பெறுபவர்கள்

K.L. இஸபெல்லா லூர்துராஜன், S.B.தெரசா ரீத்தா பெஞ்சமின், L. மெரினா ஜான் லூர்துராஜ், K. லூர்துராஜன், N.P.ஆரோக்கியமேரி பீட்டர்-சி.நம்மியந்தல், A. வியான்-திருச்செந்தூர், A. மேரி மார்கரெட் ராஜா-காரைக்குடி, ஈ. அந்தோணி-நடுஆறுபுளி, A.அருளானந்தம்-மச்சுவாடி, M.காணிக்கை மேரி அனித்தா, K. மேரி ப்ளோரா சாந்தி,M.கிளாராமேரி-அதியமான்கோட்டை, Sr. ஜேவித்தாமேரி-புதுப்பாளையம், R. மிக்கேல்சாமி Rtd.Tr-அனித்தா-இராமநாதபுரம், Sr. மேரிலிடியா-அழகாபுரம், S. ஆரோக்கியமேரி, G.அந்தோணி-நெல்லித்தோப்பு, சத்தியநாதன் ஜூலியட்-காரைக்கால், கரேஸ்மேரி ராபின், A. மார்டின்-திருச்சி, Sr.ரோசல்ட், Sr.கஸ்பார்-அறந்தாங்கி, S. பால்ராஜ், S. சாராசீலாஸ், A.விக்டோரியா-மேட்டுப்பாளையம் D. ரோஸ்மேரி தானியேல்-அழகப்பசமுத்திரம், S.ஆனி அசான் சாந்தி, D.உபகாரசாமி-புதுவை, Sr. ஹைய்சிந்-சாந்தோம், A. அருள்மேரி,Sr. மிரியம்,V.சிரில்டேமியன், P.விக்டோரியாராணி, L. மெரில்லா, M.சிறியபுஷ்பம் Tr., அஞ்சலா அருளானந்தம்-திண்டுக்கல், D.யேசுபாதம், ஊ.நிர்மலா, P.செல்வி பவுலின்மேரி-நல்லம்பள்ளி, T.குளோரி சர்மிளா-தளி, P.A. ஞானஅனுசியா-கோவைப்புதூர், P.பீட்டர்பால்-சத்தியமங்கலம், S.மெரிட்வினிதா-தூத்துக்குடி, A. ப்ளோரா-முகப்பேர், Y.அற்புதசிலி Tr-நிலக்கோட்டை, S.சந்தியாகு Rtd.H.M., A. அல்போன்ஸாமேரி Rtd.Tr.,-நாரணம்பாளையம், S.L.மரியதாஸ்-நெய்வேலி, பிலோமினா அகஸ்டஸ்-கடலூர், P. எலிசபெத் பீட்டர்-மன்னார்குடி, அமலி ஆரோக்கியசாமி-கோம்பக்காடு, Dr.A. வில்லியம் ராபர்ட்ஸன்-கோட்டுச்சேரி, பெர்னெத்-மும்பை, A.ஜெஸ்தினாமேரி-கிண்டி, A.விக்டர் எஸ்தர் Tr-மங்கலம்பேட்டை, Sr. விமலா-நல்லமநாயக்கன்பட்டி, A. அருமைராஜ்-காந்திகிராம, S. ஹெலன் வின்செண்ட், பத்மா-அவிநாசி, P. நிர்மலா, S.L. மரியதாஸ்-நெய்வேலி, M.S.லாரன்ஸ் - ரோசாலி Tr, - கண்ணம்பாளையம், C.கஸ்பர் Rtd.H.M., P.C. அந்தோணிசாமி-இளையாங்கண்ணி, Sr. அலோசியா, Sr.மெல்கியோர்-R.S.புரம், யு.ரீட்டாமேரி-அரியாங்குப்பம், ஐ.ஸ்டெல்லா சுவன. வுச.இ ளுச.எல்சி, Sr. ஜோஸ் அலுசியா, Sr.இருதயஷீலா-அம்மாப்பேட்டை, N.V. ஆண்ட்ரூஸ்-Y.M.R.பட்டி, P. மரியசகாய செபஸ்டின்-போளூர், F.சந்தோஷராணி Rtd.TR-பெரம்பலூர், S. அருள்ராஜ்-மூவரசம்பேட்டை, D.சூசைமாணிக்கம்-காந்திபுரம், S.பால்ராஜ்-வீரவநல்லூர், J. நோயல் அருள்தாஸ்-திருவாக்கவுண்டனூர், D.பெலிக்ஸ் அகஸ்டஸ், J.R. மரியதாஸ், Sr. மேரி வெர்ஜீனா, Sr. மேரி லிடியா-கோவை, L.லிட்டில்ப்ளவர், A.உபகாரசாமி Rtd.Tr., - விழுப்புரம், J. ரெபேக்கள் அன்னபாக்கியம்-முத்தையாபுரம், A. ஜெஸ்டின்ராஜ் அருள்-குலசேகரம், R.S. இரபேல்-சவேரியார் சமுத்திரம்,M.S.பாஸ்டின்-மதுரை, K.அமலராணி-ஞானஒலிவபுரம், M.செலீன்-அழகப்பபுரம், I. இக்னேசியா, A. பனிமேரி, A.அல்போன்சா, R. அல்போன்சா, D.வனஜா ராஜமுத்தையா, A.சகுந்தலா-திருநெல்வேலி பாளையங்கோட்டை, S. ஆஷாராணி, A. பிரான்சிஸ்மேரி, Dr.மீராமோகன், Sr.ஆரோன்மேரி, D.புனிதா ஜூலியட்மேரி Tr., உபகாரமேரி, P. சகாயகிருபா Tr-முசிறி, Sr. அமலோற்பவமேரி, நிர்மலா, பிரியா, சகாயம், அந்தோணி, M.மேரி லியோனி-எறையூர், K. ஹெலன்-கோட்டைமேடு, P. ரோஸி Tr - உடையார்பட்டி, ராஜா சகாயமேரி, லில்லிகிஷோர்-சௌந்தரபாண்டியபுரம், A. மார்ஷல் - P.N. பாளையம், A. புஷ்பராணி, I. ஜெசிந்தா மேரி, J.R.லிடியா ஜெனிபர்-தென்னூர், F. ஜெனிப்பர், V.சித்ரா, V.ஸ்டெல்லாமேரி Tr-திசையன்விளை, D.லூர்து ஆரோக்கியமேரி-சாத்திப்பட்டு, K.எழில்-கீழ்நாத்தூர், X. ஜெனிப்பர் கோனிக்கா, J.பவித்ரா, M.பரிபூரணம், செல்வநாயகம்-அதியமான்கோட்டை, P.செல்வி புஷ்பமேரி Tr-கும்பகோணம், T. அமலோற்பவம்-அழகன்பாறை, Sr. லாரா-திருப்பூர், ஜோஸ்பின் வர்க்கீஸ்-ரெட்டியார்பாளையம், I.R. எட்மெண்ட்-காளையார்கோவில், S. ஜோசப்பீன்மேரி சௌமியா, A. ஆல்பின்மேரி- தெற்கு கள்ளிக்குளம், G. அலெக்ஸாண்டர்-வில்லியனூர், S. ஹென்றிதாஸ்-வடக்குத்து, J.மிக்கேலம்மாள் ஜேசுமணி - K.கைலாசபுரம், எலிசபெத் ஆரோக்கியசாமி-தஞ்சாவூர், ஷர்மி-விஜிபிள்ளைவிளை, J. அல்போன்சா - மும்பை, V. கிளாரா பாக்கியசெல்வி, T. செலஸ்டீன் விமலா Rtd.Tr.-நல்லமநாயக்கன்பட்டி, ஆல்பர்ட் ஜோ, A. எலிசபெத், J. டெலக்டாமேரி - சிவகாசி, A. திவ்யநாதன், A. அமலா ஞானபிரியா- காரைக்குடி, D. ஷீலா-வடுகர்பேட்டை, A. ரத்னாஜார்ஜ்-மேலப்புதூர், A. மிக்கேல்சாமி Rtd.Tr., அனித்தா ஜெயராஜ்குமரி-இராமநாதபுரம்,A. பிரிஜித்விமலா Tr-புலியகுளம், A.மெர்லீன் சுவீட்டி ஜெனிப்பர்-கோவை, A. இசையாஸ் H.M., பெரியநாயகம் ஸ்தனிஸ் - அணையேரி.

- தொடரும்.

# யாருக்காகவும் உன்னை மாற்றிக்கொள்ளாதே

– அமீரா

ஓர் அழகிய வீடு, அம்மா, அப்பா, தங்கை, தம்பி என ஜான் ரமேசுக்கு அன்பை அள்ளித் தரும் உறவுகள். எதைப் பற்றியும் கவலைக் கொள்ளாமல் நிம்மதியாக அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் ஜான் ரமேஷ் கல்லூரி முடிந்து சோர்வான மனநிலையோடு வந்துக் கொண்டிருந்தான். இதைக் கண்ட அவனது தாய் ஏன் இவ்வாறு இருக்கிறாய் என்று கேட்க ஒன்றுமில்லை என்று பதில் கூறினான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அவனது தந்தை அவனது அருகிலமர்ந்து ஒரு நண்பனைப் போல பேசி நலம் விசாரித்தார்.

எதற்கும் பதில் கொடுக்காமல் இரவு உணவு உண்ணாமல் உறங்கச் சென்றான். காலை தாமதமாக எழுந்தான். கல்லூரிக்கு செல்ல மனமில்லாதவனாய் எதையோ பரிகொடுத்தது போல் அமர்ந்திருந்தான். இதைப் பார்த்த அவனது தாயும், தந்தையும் மிகுந்த வேதனை அடைந்தனர்.

அவனது தந்தை மீண்டும் அவன் அருகில் சென்று கல்லூரியில் ஏதாவது பிரச்சனையா அல்லது நண்பர்களுடன் ஏதாவது மனத்தாங்களா என்று கேட்க ஆமாம் என்று கூறினான். தனது நண்பர்கள் தன்னை சரியான விதத்தில் புரிந்துக்கொள்ளவில்லை என்றும் தனது செயல்பாடுகளில் குறை கண்டுப்பிடித்து பேசியதைப் பற்றி பகிர்ந்துக் கொண்டு அழ ஆரம்பித்தான். உடனே அவனது தந்தை சரி பரவாயில்லை கவலைப்படாதே என்று ஆறுதல் கூறினார்.

அடுத்த நாள் காலை குடும்பமாக இணைந்து கோவிலுக்கு சென்றனர். இறைவனை தொழுதபின் தனது மகனை அழைத்து நீ சென்று அன்னதானம் கொடுக்கும் இடத்தில் உணவை சாப்பிட்ட பின்பு அந்த மக்கள் என்ன பேசிக்கொண்டு போகிறார்கள் என்று கூர்ந்து கவனி என்று கூறி அனுப்பி வைத்தார். இவர் நமது பிரச்சனைக்கு வழி சொல்லாமல் இப்படி கூறுகிறாரே என்று எண்ணி, தந்தையின் சொல்லைத் தட்டாமல் செய்ய ஆரம்பித்தான்.

ஒருசிலர் உணவு சுவையாக உள்ளது எனவும், ஒருசிலர் அன்னதானம் அளித்த குடும்பம் நன்றாக வாழ வேண்டும் என்றும் வாழ்த்தினர். ஒரு சிலர் இவனுக்கு பணத்தை என்ன செய்வதென்று தெரியாமல் இப்படி செலவு செய்கிறான் என்று கூறிக் கொண்டே சென்றனர்.

இதனைக் கேட்டுக்கொண்டிருந்த ஜான் ரமேஷ் தனது தந்தையிடம் வந்து அனைத்தையும் பகிர்ந்துக் கொண்டான். இந்த உலகம் இப்படி தான் எல்லோரும் கூறுவார்கள். ஆனால் இவ்வுலகில் உள்ள காற்று, மழை, வெயில், நிலவு, சூரியன் அனைத்தும் அதனதன் வேலைகளை எப்போதும் போல் ஒரே மாதிரியாக தான் செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் மனிதர்கள் மாறக்கூடியவர்கள். இன்று பேசிய வார்த்தைகளுக்கு முரண்பாடாக நாளை பேசுவார்கள். இன்று சரியானது நாளை தவறாக தெரியும். அதனால் நீ யாரையும் பற்றி கவலைப்படாதே. உனக்கு எது நல்லது என்று உனது மனசாட்சி சொல்கிறதோ அதைச் செய். அடுத்தவருக்காக உனது குறிக்கோளை மாற்றினால் இறுதியில் உனது குறிக்கோளை அடைய முடியாமல் போகும். யாரைப் பற்றியும் கவலைப்படாதே. உனது வாழ்க்கையை இந்த நிமிடத்திலிருந்து சந்தோஷமாக, நிம்மதியாக வாழ ஆரம்பி.



## விண்ணக வாழ்வின் 9-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**“உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” (யோவான்.11:25)**

ஞானத்தின் உருவே!
நித்தம் உம்மை நினைக்கும் போது
சத்தமின்றி எம் வேண்டுதல்கள்
இறைவனின் திருப்பாதத்தில் ஏற்கப்படுகின்றன
நீர் ஆற்றிய ஆன்ம பணிகளை
அடியொற்றி வைத்திருந்தால்
காலத்தால் அழிக்க இயலா
காவியமாய் இருந்திருக்கும்
என் செய்வேன்!
யார் அறிவார்?
இறைவனின் அழைப்பை....

அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 30-8-2020 ஞாயிறு அன்று காலை 7.00 மணிக்கு, இறையூர் தூய ஜெபமாலை அன்னை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

## Rev.Fr.M.A. ஞானப்பிரகாசம்

**மண்ணில் : 01-09-1943**
**குருப்பட்டம் : 20-12-1968**
**விண்ணில் : 30-08-2011**

பிரிவால் துயருறும்
**சகோதரர்: Rev.Fr. M.A. பத்திநாதன், OMI**
**சகோதர, சகோதரிகள், மற்றும் உற்றார், உறவினர்கள்.**
**இறையூர்.**



## விண்ணக வாழ்வின் 3-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

***"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் எவரும் இறப்பினும் வாழ்வார்"*** **(யோவா.11:25)**

இரக்கம் நிறைந்த இயேசுவே! எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து தன் வாழ்வின் கடமைகளை முடித்து இப்பூவுலகை விட்டு சமாதானத்தில் இளைப்பாறும்படி உம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட உமது அடியார் திருமதி. **கிறிஸ்தீன் நாதன்** அவர்கள் ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லாத பிரகாசத்தையும் தந்தருளும் சுவாமி, ஆமென். - *கர்.மங்.திரி.*

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 30-08-2020 ஞாயிறு மாலை 5.30 மணிக்கு திருப்பலி புதுவை, லூர்து தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும். இதை கண்ணுறும் அனைவரும் இவரது ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

## திருமதி. கிறிஸ்டின் நாதன்

**மண்ணில் 25-06-1941**
**விண்ணில் 29-08-2017**

பிரிவால் துயருறும்
மகன்: **திரு. கிளமென்ட் நாதன்**
மகள்: **திருமதி. குளோதீன் எமானுவேல்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.**

# 16-ஆம் ஆண்டு நினைவேந்தல்

"ஆண்டவரே என் ஆற்றல், என் மீட்பும் அவரே" (எசா.12:2)







**மண்ணில் தோன்றியது 27-07-1934**

**விண்ணில் தோன்றியது 02-09-2004**

## திரு. G. அன்டொனி

## *Mr. G. ANTONY*

(Retd. Dy.Director of Accounts & Treasuries, Govt. of Pondicherry)

"ஆண்டவருக்காக ஆவலுடன் காத்திருக்கறேன் (தி.பா.130:5) என்று தன் உள்ளத்தில் சிந்தித்தவராய் கடந்த 02-09-2004 (அன்று விண்ணை நோக்கி பயணமான

**திரு. G. அன்டொனி**

அவர்கள் தம வாழ்நாளில் கொண்டிருந்த நம்பிக்கையின் அடிப்படையில், அவருக்காக இறைமகன் இயேசுவால் விண்ணில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, அவருக்குரிய இடத்தில் அவர் ஏற்றுக்கொள்ளப்பட இறைவா உம்மை இறைஞ்சுகின்றோம்.

**உருக்கமுடன் மன்றாடும்**

அன்பு மனைவி: திருமதி. பவுலின் அன்டொனி

அன்பு சகோதரர்: திரு. G. போனிபாஸ் ஜுலியன்
Assistant Accounts Officer (Retd) JIPMER

அன்பு மகன்கள்: Dr.A. மைக்கேல் பெனோ (இணை இயக்குநர், புதுச்சேரி கல்வித்துறை) A. ஜெரார்டு- (ஆசிரியர்) A.ஜோசப் பிரிட்டோ-(ஆசிரியர்)
ஆல்பர்டின் காஞ்சனா-(ஆசிரியை) கிறிஸ்டினா-(ஆசிரியை)

அன்பு மருமகள்கள்: ரோஸ்லின் பிரபா-(துணை பேராசிரியை)

அன்பு பேரப்பிள்ளைகள்: ஜோஸ்பின்மேரி ஜுலியனா M.Tech., ஜோயல் பியோ.

***02-09-2020* காலை *6.00* மணிக்கு புதுவை, திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில் திரு. G. ANTONY அவர்களின் 16-ஆம் ஆண்டு நினைவு திருப்பலி நிறைவேற்றப்படும். மன்றாட அனைவரையும் அழைக்கிறோம்.**

முகவரி: 5, VILLA IMMACULATE CONCEPTION, சின்னத்து நாடார் வீதி, குருசுகுப்பம், புதுவை-12.

# கோவிட்(ல்) வழிபாடு
# கொரோனா உள்ளே! குருக்கள் வெளியே!!!

17

அருட்திரு.V.S.தோமினிக் சாவியோ,
பங்குதந்தை, பாத்திமாபாளையம்.



கொரோனா வைரஸ் இந்த மனுக்குலத்திற்குள் நுழைந்து ஏறக்குறைய 10 மாதங்கள் ஆகிவிட்டது. இத்தனை மாதங்களாக மக்கள் தங்கள் வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றனர். தொடக்கத்தில் கொரோனாவை ஒரு அரக்கனாக, உயிரைக் குடிக்கும் பூதமாக பார்த்த மக்கள், தற்போது கொரோனா வைரஸ் என்ற கொடிய நோயை ஒரு அழையா விருந்தாளியாக, தவிர்க்க முடியா பகையாளியாகப் பார்க்கப் பழகிவிட்டனர். பிழைப்பிற்காக, உணவிற்காக, பல்வேறு தேவைகளுக்காக, பணிகளுக்காக வீட்டைவிட்டு வெளியே வந்து தங்கள் பணிகளைச் செய்யும் மக்கள் கூட்டம் இதற்கு உதாரணம். நம் அரசாங்கமும் "கொரோனாவோடு வாழப் பழகுங்கள்" என்று அறைகூவல் விடுக்கின்றது. கொரோனாவை எதிர்கொண்டு விரட்டி அடிக்க மக்களின் உடல் வலுப்பெறவில்லை என்றாலும் மக்களின் மனம் வலுப்பெற்றுவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

**கொரோனா மனிதனின் உடலுக்குள்** நுழைந்து மனிதனுக்கு பல பயனுள்ள பாடங்களைக் கற்றுக்கொடுத்துள்ளது. பணத்திற்காக, சொகுசான வாழ்க்கைக்காக, பல்வேறு இன்பங்களுக்காக உறவுகளை மறந்து அலைந்து கொண்டிருந்த மனிதனுக்கு, உறவுகளின் மேன்மையை உணர்த்தியிருக்கின்றது. குடும்பச் சொந்தங்களோடு, பெற்ற பிள்ளைகளோடு, உரையாட, உறவாட நேரமில்லை என்று ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த மனிதனை, வேறு வழியில்லை, இனி நம் பிள்ளைகளோடு, சொந்தங்களோடு பேசி, பழகித்தான் ஆக வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளியுள்ளது கொரோனா.

**அழிவு சக்தியான கொரோனா** ஆன்மீகத் தலைவர்களான குருக்களுக்குள்ளும் பல ஆக்கப்பூர்வமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது உண்மையே. இது புறத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் அல்ல, அகத்தில் ஏற்பட்டமாற்றங்கள். அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே வரிசைப் படுத்தலாம்.

**1. மிஷனரி (Missionary) :** ஒரு 1000 ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஆசிய நாடுகளுக்கு வந்து இயேசுவைப் பற்றிய நற்செய்தியைப் பரப்பி, மக்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றிய குருக்களை நாம் 'மிஷனரி' என்று கூறுகின்றோம். கடல் கடந்துவந்துகிறிஸ்தவ விசுவாசத்தை வளர்த்தவர்கள் இவர்கள். இந்த 'மிஷனரி' என்ற வார்த்தையை இன்றைய இந்திய குருக்கள், 'இது வெளிநாட்டிலிருந்து வந்தவர்களுக்கு மட்டுமே சொந்தமான வார்த்தை' என்று பத்திரப்படுத்தி வைத்திருந்தோம். 'மிஷனரி' என்ற சொல்லின் உள்ளார்ந்த பொருள் 'அனுப்பப்பட்டவர்' என்பதாகும். அதாவது, திருநிலைப்படுத்தப்பட்ட குருவானவர் மக்களைத் தேடிச் செல்ல வேண்டும் என்று பொருள்படும். ஒவ்வொரு குருவும் ஒரு 'மிஷனரி'தான் என்பதை மறந்து வாழ்ந்திருந்த வேளையில் கொரோனா 'ஒவ்வொரு குருவும் மக்களைத் தேடிச் சென்று பணியாற்ற அனுப்பப்பட்ட ஒரு மிஷனரிதான்' என்பதை நினைவு படுத்தியிருக்கின்றது. அதாவது, மக்கள் குருக்களைத் தேடிவரும் நிலையிலிருந்து குருக்கள் மக்களைத் தேடிச் செல்லும் நிலையை கொரோனா உருவாக்கியுள்ளது. பல குருக்கள் மக்களின் இல்லம் தேடிச் சென்று அவர்களைச் சந்தித்து, அவர்களுக்கு பல்வேறு உதவிகளை செய்வதை நாம் இந்த ஊரடங்கு காலத்தில் காணமுடிகின்றது. குருக்கள் பூஜாரிகள் என்ற மனப்பான்மையிலிருந்து வெளியேறி 'மிஷனரி' என்ற மன்பான்மையை குருக்கள் பெற்றுள்ளனர்.

**2. அதிகார மையத்திலிருந்து மக்களின் மையம் நோக்கி :** ஒவ்வொரு குருவுக்கும் ஒரு தனிப்பட்டபணி (Ministry) வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணியைச் செய்ய குருவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரம் அலுவலகம் மற்றும் நாற்காலியை மையப்படுத்திய அதிகாரம் அல்ல மாறாக மக்களை மையப்படுத்திய அதிகாரம் என்பதை கொரோனா வெளிப்படுத்தியிருக்கின்றது.

**இயேசு தம் சீடர் பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்தார். தீய ஆவிகளை ஓட்டவும், நோய் நொடிகளைக் குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார். (மத்:10:1)**

இயேசு தன் திருத்தூதர்களுக்கு மக்கள் பணியாற்ற அதிகாரம் அளித்தார். அதாவது, திருத்தூதர்கள் மக்களைத் தேடிச் சென்று சந்தித்து, நற்செய்தியை போதித்து, நோய்களைக் குணப்படுத்தி, பேய்களை ஓட்டும் அதிகாரம். இது அலுவலகம் மற்றும் நாற்காலியை மையப்படுத்திய அதிகாரம் அல்ல. குருக்களுக்கு கடவுள் வழங்கும் அதிகாரம் மக்களை அலுவலகத்தை மையப்படுத்திய அதிகாரம் அல்ல மாறாக, மக்களை நாடிச் செல்லுகின்ற அதிகாரம் என்பதை குருக்கள் உணர்ந்துள்ளார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. குருக்களின் அதிகாரம் நற்செய்தியை போதிப்பதிலும், மக்களை ஆற்றுப்படுத்துவதிலும், நம்பிக்கையில் திடப்படுத்துவதிலும் உள்ளதே தவிர மக்களை கண்டிப்பதிலும், தண்டிப்பதிலும் இல்லை என்பதை உணர கொரோனா ஒரு வாய்ப்பை குருக்களுக்கு வழங்கியுள்ளது. குருக்கள் தங்களின் நாற்காலி சார்ந்த அதிகார மையத்திலிருந்து வெளியேறி மக்கள் பணி சார்ந்த அதிகார மையம் நோக்கி நகரத் தொடங்கியுள்ளது கொரோனா ஏற்படுத்திய உள்ளார்ந்த மாற்றம்.

**மாற்றங்கள் தொடரட்டும்...**

**Published and Printed by** Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam.
Manager : Very Rev. Msgr. A. Arulanandam.